DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.67/2023**

**prosecution witness: Pw - 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கார்த்திகேயன் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**<u>04.08.2023</u>**

<u>முதல் விசாரணை:-</u>

**நான் மண்டபம் முல்லை நகரில் குடியிருந்து வருகிறேன். எலக்டிரிசனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களை தெரியும். எதிரியுடன் அ.சா.1 சமாதானமாகிவிட்டார். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.**

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1) **போலீசார் விசாரணையில் கடந்த 19.04.2022 ல் 15.00 மணிக்கு அ.சா.1 ம், அவரது நண்பர்களான நானும், அ.சா.2, ஆஜர் எதிரி ஆகியோர் சேர்ந்து சுடுகாடு டாஸ்மார்க் மதுக்கடையில் மது குடித்துகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது மது வாங்க நான் செலவு செய்து மீதம் வைத்திருந்த பணத்தில் 2000 த்தை காணவில்லை என்றால் சரியல்ல. அப்போது அ.சா.1, ஆஜர் எதிரிதான் பணத்தை எடுத்ததாக அ.சா.2 விடம் சொன்னார் என்றால் சரியல்ல.**

2) அப்போது எதிரியிடம் பணத்தை எடுத்தியா என்று கேட்டதற்கு வாக்குவாதம் ஏற்பட்டு ஆஜர் எதிரி அ.சா.1 யை கெட்டவார்த்தையால் பேசி கையில் வைத்திருந்த மதுப்பாட்டிலால் ஓங்கி அடித்து வலது கண்புருவத்தில் ரத்தக்காயம் ஏற்படுத்தியதாக சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.